# வேண்டுவது ஒன்று!

காலவெள்ளம் ஓடிக்கொண்டிருந்தது.

பலதையும் அள்ளி உருட்டியபடி அது ஓடிக்கொண்டிருந்தது!

காலப் பெருவெள்ளம்!

மனித சமுதாயங்கள், தேசங்கள் எல்லாம் அதில் உருண்டோடிக்கொண்டிருந்தன!

இவற்றைப் பார்த்தும் பார்க்காததைப் போல வானம் அமைதியாயிருந்தது. முகில்கள் நின்றும் அசைந்தும் நகர்ந்தும்கொண்டிருந்தன.

இரவு தோன்றுவதற்கு முன்னதாக பறவையொன்று தன் வீடு நோக்கிச் சென்றுகொண்டிருப்பது தெரிந்தது.

இதற்கு முன் வந்துவிட்ட இன்னும் சில இனங்கள் அந்த உச்ச மரக்கொப்புகளில் அமர்ந்து குரல் தந்துகொண்டிருந்தன.

கால வெள்ளம் ஓடுகிறது.

இன்று அங்கு மரங்கள் இல்லை.

ஓலை வீடுகள், வயல்கள். பின்னர் ஓட்டுக் குடிமனைகள். அதன் பின்னர் அவையும் தீக்கிரையாகி -

பரந்த வெளியொன்று தெரிகிறது.

தமிழர் இந்த வாழ்விடத்தை இழந்து இடம்பெயர்ந்து விட்டனர்.

எங்கு?

அகதி முகாமில் இடித்து நெருங்கி நலிந்து, நோயும் சொறி சிரங்கும் கொண்டு தம் குழந்தைகளுடன் நிற்கின்றனர் - 'அகதி முகாம்' என்ற பெயர்கொண்ட அடைப்பில்!

காலம்செய்யும் கோலம் தெரிந்தது. அதனை வைது திட்டாது இருக்க முடியவில்லை!

ஆனால் அது ஓடிக்கொண்டிருந்தது.

வானம் மேலே நின்று சிரிப்பது தெரிந்தது!

"மனிதரைப் பார்" என்றது அதே வானம்.

எனக்கு எம் அகதி முகாம்கள் மீண்டும் தெரிந்தன. இங்கும் பிறநாட்டிலும் அகதிகளாய் நிற்கும் எம்மவர் தெரிந்தனர்.

"உன்னை மட்டுமல்ல! பிற மனிதரையும் பார்! பிற நாடுகளையும் பார்!" என அதட்டிற்று அது.

"அதோ!" என அதன் குரல் மீண்டும் கேட்டது.

அங்கு சந்திர மண்டலம் தெரிந்தது. அதில் ஒரு மனித சின்னம் ஒளிர்வதும் தெரிந்தது!

அங்கு 1969 யூலை என்ற தேதியும் நீல் ஆம்ஸ்ரோங் உட்பட மூவரின் பெயர்களும் என் கண்ணுக்குத் தெரிந்தன.

"அவ்வளவுதானா?" என ஏளனம் செய்தது வானம்!

உற்றுப் பார்த்தேன். தங்கள் பெயருடன் தங்கள் நாட்டின் பெயரையும் அவர்கள் பதித்திருப்பதைக் கண்டேன்!

"தம் நாடுதான் அவர்களின் வாழ்வு!

சரி, இன்னும் பார்!" என அதிர்ந்தது ஒலி.

முன்னைய 'அராபியப் பாலைவனம்' இன்று எண்ணெய் வள நாடுகளாய்த் தெரிந்தன! அதில் சவூதி, யேமன், ஓமான், குவைத், துபாய் எல்லாம் தெரிந்தன! அங்கும் எம்மவர் கூலிதேடிப் போவதே தெரிந்தது.

"இன்னும் அகலப் பார்!"

முன்பு 'இருண்ட கண்டம்' என அழைக்கப்பட்ட ஆபிரிக்கா தெரிந்தது!

இன்று 1950 ஆம் ஆண்டின் பின், போர்க்கொடியும் பட்டொளியும் பறக்கும் புத்தம் புது நாடுகள் பல, அந்த ஆபிரிக்கக் கண்டத்தில் எழுந்து நிற்பது தெரிந்தது!

"இன்னும் பார்!" எனத் தொடர்ந்தது குரல்.

கால வெள்ளம் பதித்த பல சுவடுகள் தெரிந்தன.

200 வருடத்திற்கு முன்னைய பிரெஞ்சுப் புரட்சி தெரிந்தது.

1776 - பிரித்தானியரிடமிருந்து தன்னை விடுவித்த அமெரிக்க சுதந்திரப் பிரகடனம் தெரிந்தது! அதன்பின் அது கண்ட முன்னேற்றம் தெரிந்தது!

இதற்கும் அடிகொடுத்து தன்னைப் போர்மூலம் மீட்பித்த வியட்னாம் தெரிந்தது. யப்பான் தெரிந்தது யேர்மனி தெரிந்தது. மக்கள் சீனா, கியூபா, தெரிந்தன. சோமாலியா தெரிந்தது. கிழக்கு ஆசியக் கண்டம் தெரிந்தது!

"எதற்கும் மூலவளம் வேண்டும் -

அயராத உழைப்பு வேண்டும்" என்றது என் மனம்.

"அவை எதுவும் போதாது" என்றது ஒலி!

"பின்?"

"நின்று நிலைத்து நிமிர்ந்து வாழ ஒரு நிலம் வேண்டும். நீ வாழ வேண்டின், உனது நாடு உனதாக வேண்டும்.

- இதை அடுத்து வருவதே அனைத்தும்!"

நாக. பத்மநாதன்

## போராளியின்...

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தான், எதிரிப்படையை அதற்குள் தப்பும் வழியற்றுச் சிக்கவைத்துத் தாக்கி அழிக்க முடியும். அவ்வளவு நேர்த்தியாக வியூகம் அமைக்க வேண்டுமானால், எதிரியின் நகர்வு பற்றி மிகத் துல்லியமான தகவல்கள் தேவை. படையினரின் தொகை என்ன? ஆயுத - படைக்கல வகைகள் என்னென்ன? படையூர்திகள் மற்றும் வசதிகள் எப்படி? என்ன ஒழுங்குமுறையைக் கையாண்டு எதிரி படை நகர்த்துகின்றான்? என்ற தரவுகள் எந்தப் பிசகுமின்றிக் கிடைக்கவேண்டும்.

அவற்றின் அடிப்படையில்தான்- நாம் சிறந்ததொரு வியூகத்தை அமைத்து, நம்பிக்கையோடு காத்திருக்க முடியும்.

புலோப்பளையில் இந்தப் பணியைச் செய்து முடித்தவன் நவநீதன். நாங்கள் காவியம் படைத்த அந்தப் பெருஞ்சமரில், வெற்றிவாகை சூடக்கூடியவாறு, நுட்ப தந்திரோபாயமான போர் வியூகத்தை அமைக்க சரியான தகவல்களைத் தந்தது மட்டுமல்ல - இரவிரவாக நடந்துதிரிந்து சண்டைக்கேற்ற 'நிலை இடம்' தேடுவதில் நவநீதன் தளபதிகளுக்கு உதவினான்.

எல்லா ஏற்பாடுகளும் முடிந்த பின்பும், மீண்டும் முன்னுக்கே சென்று இறுதிவரை எதிரியின் நகர்வுகளைப்பற்றிய தகவல்களைத் தந்துகொண்டிருந்தவனுக்கு, சண்டை துவங்கியவுடன் பின்னுக்கு வந்துவிடுமாறுதான் சொல்லப்பட்டது. ஆனால், உரிய இடத்திற்குள் எதிரியின் படையணி வர, எமது முதலணியோடு களத்திலிறங்கிச் சமரை ஆரம்பித்தது அவன்தான்.

அடுத்ததுதான் பூநகரிச் சமர்- புலிகள் இயக்கத்தின் போரிடும் சக்தியைப்பற்றி சர்வதேச செய்தி அலைவரிசைகளையெல்லாம் வியந்துரைக்கவைத்த செருக்களம்.

அவலப்பட்ட மக்களுக்குப் பாதை திறக்கக் கேட்டபோது - அரசியல் பேரம்பேசி அகங்காரம் செய்தோர்க்கு உச்சந்தலையடி கொடுத்த போர் அரங்கு.

அந்தக் கூட்டுத்தளத்தின், 'வில்லடி' கட்டளை முகாமைத் தாக்கும் பெரும் படையணிக்குள், உபகுழுவொன்றுக்கு நவநீதன் தளபதி. ஒதுக்கப்பட்ட ஒரு காவலரண் தொகுதியைத் தாக்கி அழித்தபின், முகாமின் மையத்தைத் தாக்கும் பிரதான படைப்பிரிவுக்குத் துணைக்குழுவாக இறங்கவேண்டுமென்பதுதான், அவனுக்குக் கொடுக்கப்பட்ட பணி.

'வில்லடி' முகாம்தான், கூட்டுத்தளத்தின் கட்டளை முகாம். அது மிகப் பலமானது. 91 ஆம் ஆண்டு ஆனையிறவுத்தளத்தை நாம்வெற்றிகொள்ள முற்பட்டபோது அது இருந்ததைப்போல, ஏறக்குறைய அதேயளவு பலத்துடன்தான் இது இருந்தது.

நள்ளிரவுக்குச் சற்றுப் பின்னர் சண்டை ஆரம்பித்தது. விடிந்தபோது நவநீதனுக்கான காவலரண் தொகுதி தாக்கியழிக்கப்பட்டுவிட்டது. ஆனால் கட்டளை முகாமில், 'ராங்க்' குகளையும், பெருந்தொகை ஆயுதங்களையும் இழந்த எதிரி, சிறு பகுதியொன்றில் எஞ்சியிருந்தான்.

அர்த்தசாம இருளில் சிதறியோடிப்போன சிப்பாய்களும், விடிந்த பின் கட்டளை முகாமை நோக்கி ஓடிவர, திடீரென எதிரி அசுர பலம் பெற்றான்.

எதிரி, 'அடுக்குமுறைப்பாதுகாப்பு முறையில்' (Depth Defence System) ஒன்றன்பின் ஒன்றாக அமைத்திருந்த காவலரண்களைத் தகர்த்தெறிந்துகொண்டு, 'கனரக மோட்டார் பீரங்கி' உள்ள தளத்தை நோக்கி முன்னேறியஎமதணி அதனைக்கைப்பற்றும்போது, அணி பெருமளவில் சேதப்பட்டுவிட்டது; பொழுதும் விடிந்துவிட்டது.

அந்த நேரத்திலேயே - துணைக் குழுக்களை அழைத்து பீரங்கிகளை அப்புறப்படுத்த முன்னர் - எதிரி புதுப்பலம் கொண்டு கடுமையாகத் தாக்கத் துவங்கினான்.

பீரங்கித் தளம் வெளியான தரையமைப்பைக்கொண்டது. முற்றாக அவனுக்குச் சாதகமான களம். அத்தோடு, திட்டமிட்ட ரீதியில் அமைக்கப்பட்ட சக்திமிக்க அரண்களிலருந்து எதிரி தாக்கி முன்னேறினான்; விடிந்துவேறுவிட்டது. வானூர்திகள் பார்த்துப்பார்த்துக் குண்டடித்தன. இரவுச் சண்டையிலேயே மிகுந்தளவில் பலவீனப்பட்டுப்போன எமதணி, இயலுமானவரை போரிட்டது; பீரங்கிகளை விடக்கூடாது என்ற உறுதிப்பாட்டுடன் போரிட்டது. ஆனால், ஏறக்குறைய அது முற்றாகவே சேதப்பட்டு விட்ட நிலையில், பீரங்கிகளை மீட்க முடியாமலே பின்வாங்க நேரிட்டது.

கைப்பற்றப்பட்ட பீரங்கித் தளமும், பீரங்கிகளும் கைவிடப்பட்டுவிட்டன. இப்போது பீரங்கித் தளம் நடுவில். அதன் பின்னால் எதிரிப் படை; முன்னால் புலிகள் படை. பீரங்கிகள் அநாதரவாகக் கிடந்தன - அவனுக்குப் பக்கத்தில், எங்களுக்கு எட்டத்தில்.

திரும்பவும் தாக்கி அவற்றைக் கைப்பற்றியே ஆகவேண்டும். ஆனால் பகலில்......? அது முற்றுமுழுதாகவே பகைவனுக்குச் சாதகமான சூழ்நிலை. பெரும் இழப்பைக் கொடுத்து, மிகுந்த சிரமத்துடனேயே நாம் மோதவேண்டியிருக்கும். அப்படியானால் இரவு .....? இல்லை: இருளும்வரை காத்திருக்க முடியாது. எதிரி மீண்டும் சுதாகரித்து, முழுப்பலத்தையும் திரட்டி முன்னேறி, பீரங்கிகளைத் திரும்பக் கைப்பற்றிவிடக்கூடும். அதனால், அவனுக்கு அவகாசம் கொடுக்காமல் உடனடியாகத் தாக்குதலை நடாத்தவேண்டும்.

இது ஒரு சிக்கல் நிறைந்த கள நிலைமை இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில்தான் நவநீதன் அழைக்கப்பட்டான்; அவன்தான் அதற்கு உரித்தானவன்.

தேர்ந்தெடுத்த வீரர்களைக் கொண்டு உடனடியாக ஒரு தாக்குதலணி தயார் செய்யப்பட்டது. அந்த அணியின் கொமாண்டராகி சண்டையைத் துவக்கினான் தளபதி.

முரட்டுத்தனமான முன்னேற்றம். அது அவனுக்குப் பழக்கப்பட்ட வேகம். 'பீரங்கிகள்' - என்ற ஒரே உறுதியுடன் பாய்ந்தனர் வேங்கைகள். நிலைமையைப் புரிந்துகொண்ட எதிரி பலம்கொண்டமட்டும் மோதினான்; தாக்குதலை முறியடிக்க தன் சக்திக்கு மீறிச் சண்டையிட்டான்.

இருந்தபோதும் -

பீரங்கிகளை அடையும்வரை நவநீதன் சண்டையை நடாத்திச் சென்றான்.

எதிரியின் வெறித்தனமான தாக்குதலுக்கு மத்தியிலும் தளத்தைக் கைப்பற்றினர் புலிகள்.

பீரங்கிகள் இரண்டு.

முதலாவதைக் கழற்றி எடுத்துப் பின்னுக்கு அனுப்பிவிட்டபோது - உற்சாகம் பொங்கியது.

நெருப்பு மழைக்குள்ளும் இரண்டாவதைக் கழற்றிக்கொண்டிருக்கும்போதுதான்...... அந்தத் துயரம் நடந்தது!

எங்கள் கதாநாயகனுக்குப் பக்கத்தில்..... மிக அருகில்......எதிரி ஏவிய மோட்டார் குண்டொன்று விழுந்து வெடித்தது ...... அவனை...... ஓ! அதை எப்படிச் சொல்ல......?

எங்கள் கண்களுக்கு முன்னாலேயே, எங்கள் நெஞ்சினிய நண்பன்...... கை...... கால்...... இடுப்பு ......நெஞ்சு ...... முகம் ...... எல்லாமே பிய்ந்துபோய்...... தசைகள் தொங்கி...... இறைச்சியாய்...... ஓ! அதை எப்படி விபரிக்க......

இரத்த வெள்ளத்தில் விழுந்து கிடந்துகொண்டும எங்கள் நவநீதன் கத்தினான்...... "மோட்டரை எடுங்கோடா ...", "மோட்டரை விடாதேங்கோடா ..."

உயிரின் கடைத்துளி சிந்தும் போதும், சத்தமில்லாமல் அவனது வாய் அசைந்துகொண்டேயிருந்தது .. அது "மோட்டரை விடாதேங்கோடா......" என்ற கட்டளையாகத்தான் இருந்திருக்கும்!

அவன் சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

நாங்கள் விடவில்லை.

கொண்டுதான் வந்தோம்! ○

## வெளிநாடு...

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வியை நாடியுள்ளது. திருப்பியனுப்பப்படும் பணியை இந்த சர்வதேச நிறுவனமே கண்காணிக்க இருக்கின்றது என, சுவிஸ் அரசின் செய்திகள் தெரிவிக்கின்றன. இது உண்மையில் ஐரோப்பாக் கண்டம் முழுவதினதும் ஆசியுடன் சுவிஸ் அரசு மேற்கொள்ளும் ஒரு நடவடிக்கைதான். அதாவது, சுவிஸ் அரசைத் தொடர்ந்து மற்றைய ஐரோப்பிய அரசுகளும் ஈழத்தமிழர்களை வெளியேற்றும் பணியை ஆரம்பிக்கலாம் என, அவதானிகள் தெரிவிக்கின்றனர். இப்போதே பல ஐரோப்பிய நாடுகளில், சட்டவிரோதமாகப் புகுந்தவர்கள் என்ற குற்றச்சாட்டில், பல்லாயிரம் தமிழர்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இதேவேளை, ஐரோப்பிய நாடுகளுக்குள் புகுவதற்கென 5000 ஈழத்தமிழர்கள் மொஸ்கோவில் காத்திருக்கின்றனர் என்றும், நம்பகரமான செய்திகள் கூறுகின்றன. முதலில் இத்தகையோர் நாடுகடத்தப்படலாம் என்றும், பின்னர் படிப்படியாக தாயகம் திருப்பியனுப்பப்படும் பணிகள் நடபெறலாம் என்றும் ஊகிக்கப்படுகின்றது.

இவ்விதம் அரசுகளினால் சட்டபூர்வமாகத் திருப்பியனுப்பப்படும் பணி நடைபெறும் அதேவேளை, சில சட்டவிரோதக் குழுக்கள் வெளிநாட்டவர்கள்மீது பயங்கரவாதங்களைப் புரிந்து, அவர்களை அப்புறப்படுத்தவும் முயல்கின்றன.

தமது சேமிப்புகளை விற்றுவந்த பணத்தில் இலட்சக்கணக்கான ரூபாய்களைச் செலவளித்து, பொருள்தேடும் ஆர்வத்துடன் மேலை நாடுகளுக்குச் சென்ற தமிழர்களையும் அவர்களது குடும்பங்களையும், இந்தச் செய்திகள் துயரப்படுத்தும் என்பது உண்மை.

நிலைமை இப்படியிருக்க, இவை எதையும் கருத்திலெடுக்காது ஒரு அசட்டு நம்பிக்கையில், வெளிநாடுகளுக்கு தமிழ் இளைஞர்கள் தொடர்ந்தும் படையெடுக்க முயல்வது, வெளிநாடுகளின் அரசியல் நிலைமையைப் புரிந்துகொள்ள முயலாத தன்மையையே வெளிக்காட்டுகின்றது. ○

## லெப். கேணல் நவநீதன்

# ஒரு உண்மை வீரனின் கதை

நவநீதனைப்பற்றிச் சொல்வதானால் சண்டையில் தான் ஆரம்பிக்க வேண்டும்; சண்டைகளால் தொடரவேண்டும்; சண்டையொன்றில் முடிக்கவேண்டும். அவனது சண்டைகளை விளக்குவதன்மூலம் தான் அவனை வர்ணிக்க முடியும். அந்தளவுக்கு சண்டைக்களங்களிலேயே அவனது வாழ்வு உருண்டோடியது; சண்டைக்களங்களிலேயே அவன் தூங்கி விழித்தான்.

பழம்பாசியில் ஒரு சண்டை.

பால்ராஜ் அவர்கள் வன்னிக்குத் தளபதியாக இருந்தபோது, அவரது பாதுகாப்பு அணிக்குப் பொறுப்பாக இருந்தவன் நவநீதன்தான்.

தவிர்க்கமுடியாத ஒரு பயணம்; தளபதி போகவேண்டியிருந்தது. அரசியலுக்குப் பொறுப்பாக இருந்த லெப்ரினன்ட் கேணல் சந்திரனும் கூட. போயே ஆகவேண்டும்; நோக்கம் முக்கியமானது.

அது இந்தியப்படைக் காலம்; இடறுப்படும இடங்களிலெல்லாம் அவர்கள் நகர்ந்துகொண்டிருந்த ஒரு சூழ்நிலை. மிக நெருக்கடியான ஒரு நேரம்; இடமும் அப்படித்தான்; மைய இலக்குவைத்து இந்தியர்கள் படை நடாத்திக்கொண்டிருந்த மணலாற்றின் வேலியோடு-

குறைந்தளவு வீரர்களையே கொண்டு நகர்ந்துகொண்டிருந்த எம் அணிக்கு, திசையறி கருவி வழிகாட்டிக்கொண்டிருந்தது. தண்ணிமுறிப்பு வீதியைக் கடந்து பழம்பாசிக் காட்டுக்குள் இறங்கியபோது- வழமைபோல முதலாவது ஆளாகச் சென்றுகொண்டிருந்த நவநீதன், திடீரென நடை தயங்கி, 'அலேட் பொசிசனில்' வைத்திருந்த 'எம்-16' ஐ உயர்த்தி, மூக்கைச் சுழித்துக் கொண்டு திரும்பினான்.



அநேகமான தடவைகளில் இந்தியர்களின் அரவம் காட்டி, எம்மை அரட்டிவிடுகிற அந்த 'மணம்' - சற்றுக் கூடுதலாகவேகவாசத்தோடு கலந்தது.

காட்டுப் பாதை; இடைக்கிடை நாம் பயன்படுத்துகின்ற தடம்தான் - அவதானித்திருக்கக்கூடிய எதிரி, இரை தேடி வந்திருந்தான். ''இந்தியப்படையின் விசேட அதிரடிக் கொமாண்டோக்கள்'' - தடயங்களை வைத்து புலிகள் ஊகித்துக் கொண்டனர். எங்கள் பாதையின் ஏதோ ஓர் இடத்தில் நிச்சயமாக எதிரி நிலை எடுத்திருப்பான்; நம்பிக்கை உறுதியாக இருந்தது.

கைவிட முடியாத பயணம்; தேவை பெரியது. இது ஒருபுறம் போக, 'அடிக்கப் போகின்றவனுக்குத் திருப்பி அடித்தே ஆகவேண்டும்' என்ற ஆவேசமும் எழுந்தது. நவநீதனே முனைப்பாக நின்றான்.

தளபதி ஒழுங்கமைத்தார்; அணி இரண்டாக்கப்பட்டது. பிரதான குழுவிலிருந்து குறிப்பிட்ட ஒரு தூரத்தில் துணைக்குழு நகரும்.

ஒரு பதுங்கித் தாக்குதலானது பலவகைப்பட்டதாக அமையும். வலதுபுறமிருந்து வரலாம்; இடதுபுறமிருந்து வரலாம்; நேரெதிலிருந்து வரலாம். சில சமயம், வலது அல்லது இடது புறத்தோடு எதிர்ப்பக்கத்திலிருந்தும் '' L '' வடிவத்தில் வரலாம். இவற்றில் எது நடந்தாலும் எதிர்கொள்ளக்கூடியவாறு திட்டமிடப்பட்டது; பிரதான குழு தாக்குதலைச் சந்திக்க, துணைக்குழு காட்டுக்குள் இறங்கி, வளைத்து, எதிரியை நாரிப்பக்கத்தால் தாக்கவேண்டும். நவநீதன் தான் கொமாண்டர்.

அணி அசையத்துவங்கியது; வழமைபோல நவநீதன்முன்னுக்கு. அது அவனுக்கே உரிய துணிவு - கத்திக்கொண்டு பறந்த ஒரு காட்டுக் குருவியைத் தவிர நிசப்தம் தன் முழு ஆதிக்கத்தையும் செலுத்தியிருந்தது; 'மயான அமைதி'யைவிடப் பயங்கரமானது 'வன அமைதி'. எதிர்பார்க்கும் சண்டை; எதிர்ப்படப்போகும் நேரத்தை எதிர்கொள்ளத் துணிந்த மனது. அதிகரிக்கும் இதயத் துடிப்போடு கலந்த ஆக்ரோசம். சுடத் தயாரான துப்பாக்கிகளின் குழல்வாய்கள் நிமிர்த்தி - பாயத்தயாரான புலிகளின் பதுங்கல் நகர்வு. சருகு நெரிபடும் சத்தத்தோடு மட்டும், அடிமேல் அடிவைத்து அணி நகர்ந்து கொண்டு .....

திடீரென, இயல்பு மாறிப்போயிருந்தது காடு; இயற்கை குலைந்து போயிருந்தது வனம். சூரியனை நோக்கி வளரவேண்டிய மரக்கிளைகள் சில, வளைந்து, பூமியை நோக்கி இருந்தன. இருக்கக்கூடாத இடங்களில், சருகுகள் கூடுதலாய்.

சருகுகளின் மறைப்பினூடு மின்னுகிற எல் எம். ஜி. குழல்; இலைகுழைகளின் உருமறைப்பிற்குள் வெட்டிவெட்டி முழிக்கும் கண்கள்; மெல்ல அசையும் 'ஹெல்மெட்'டுகள்.

கண்டுகொண்ட நவநீதன் நிதானிக்க, பார்த்துவிட்ட தளபதி சைகை செய்ய, தாசனின் துணைக்குழு காட்டுக்குள் இறங்க - மூர்க்கத்தனமான சண்டையைத் தொடங்கிவைத்தான் நவநீதன். எட்டித்தொடும் தூரத்திற்குள் இயந்திரத் துப்பாக்கிகளின் குமுறல்; எம்.16 சுடு குழல் சிவக்க, எதிரிகளின் உச்சந்தலையைக் குறிவைத்தான் அந்த வீரன். இந்தியக் கொமாண்டோக்களின் முன்வரிசை அணியை, பதுங்கிய இடத்திலேயே அவன் படுக்க வைத்தது, பிரமிப்பூட்டுகிறவேகம். முதலாவது ஆளைச் சுட்டதிலிருந்து, சண்டையை நடாத்தி, துரத்தித் துரத்தி அடித்து, ஆயுதங்களை எடுத்து முடித்துவைத்து- எல்லாமே அவன்தான்.

'அதிரடியை முறியடித்து அதிரடித்தல்' - படையியல் விஞ்ஞானத்தில் இதற்கு 'Counter Ambush' என்று பெயர். எங்கள் போராட்ட வரலாற்றில் இது ஒரு முக்கிய சம்பவம்; தளபதி பால்ராஜின் நெறிப்படுத்தலில் செய்வித்து முடித்தவன் நவநீதன்.

ஆனால், தினேசுக்கு இதயத்துக்குப் பக்கத்தில் வெடிகொழுவிக் கொண்டது. பீறிட்டுப் பாய்ந்த இரத்தத்திற்கு சாரத்தைக் கிழித்துக் கட்டுப் போட்டு, தடிமுறித்து 'ஸ்ரெச்சர்' கட்டித் தூக்கமுற்பட்ட போதும், வேதனையின் முனகலோடு தினேஸ் மறுத்துவிட்டான்.

ஆசையோடு தளபதியின் கன்னங்களைத் தடவினான்; கூடவந்த தோழர்களின் நிலைமைகளை விசாரித்தான்; பெற்றெடுத்த ஆயுதங்களைத் தொட்டுப்பார்த்துப் பூரித்தான்; எங்கள் 'டடி' முகாமில் - மற்றத் தோழர்களுக்குப் பக்கத்தில் தான் தன்னையும் புதைக்குமாறு வேண்டியவன் முனகி முனகி, மெல்ல அடங்கி எல்லோரையும் பார்த்து விழிகளை மூடியபோது, வெற்றியின் ஆயுதங்களைக்காட்டி அதற்கு வித்தாகிப் போனவனை வழியனுப்பிவைத்துவிட்டு, நவநீதன் இறுகிப்போய் நின்றான்.

வரலாற்றில் பொறிக்கப்பட்ட மாங்குளம் முகாம் தகர்ப்பு -

தமிழீழத்தின் நெஞ்சத்தின்மீது குந்தியிருந்த பக்கத்து நாட்டுப் படைகளைக் குடியெழுப்ப நிகழ்த்தப்பட்ட தாக்குதல். இரண்டாவது தடவையாகவும் -நிச்சயமாக இறுதியானது எனவும் முடிவுசெய்யப்பட்ட சமர்-

முதல்நாள் - நள்ளிரவுக்குச் சற்று முன்னர் ஆரம்பித்த சண்டை, மறுநாள் விடிந்து மதியமாகியும் நடந்துகொண்டிருந்தது தென்முனை முற்றாகவே எதிரிக்குச் சாதகமான பிரதேசம். அது வயல்வெளி; அங்கு அவனது கைதான் ஓங்கியது. கூடுதலான இழப்பைச் சந்தித்ததால், எங்கள் தாக்குதலணி காலையிலேயே பின்னால் எடுக்கப்பட்டுவிட்டது. தென்முனை வழியான தாக்குதல் நிறுத்தப்பட்டுவிட்டது.

வடமுனையில் தனது முழுச் சக்தியையும் பிரயோகித்து எதிரி தடுத்து நின்றும், அவனது அரண்களையும், மினிமுகாம்களையும் உடைத்துக் கொண்டு முன்னேறிய புலிகளின் அணி, பிரதான முகாமிற்கு அருகில், 'ஹெலி' இறங்கு தளத்தில் - கடும் எதிர்ப்புக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்தது. எதிரி, தனது பலமான அரணொன்றிலிருந்து மூர்க்கத்தனமாக மோதினான்; தனது முழுப் பலத்தையும் திரட்டிச் சண்டையிட்டான்.

ஏனெனில், 'ஹெலி' இறங்கு தளம் யாருடைய கைக்குப் போகின்றதோ அந்தப்பக்கம்தான் வெல்லும். அவனிடம் போய்விட்டால் உதவி எடுத்து புத்துயிர் பெற்றுவிடுவான்; எங்களிடம் வீழ்ந்துவிட்டால் தனித்துவிடப்பட்டுக் குற்றுயிர் ஆகிவிடுவான். எனவே எதிரி இறுதி முயற்சியாக மோதினான் உயிர் பிரிகிற நேரத்தில் ஒரு அசுர பலம் வருமாமே, அந்தப் பலம் கொண்டு தாக்கினான்.

சண்டை உக்கிரமடைய அடைய, எங்கள் தாக்குதலணி பலவீனப்பட்டுக்கொண்டிருந்தது. ஆனால் நாங்கள் கைவிட முடியாது; ஹெலித்தளத்தை விட்டுச் சற்றுப் பின்னால் வந்தால்கூட, நாங்கள் தோல்வியடைந்ததுக்குச் சமம். எதிரி நிலத்தோடு மட்டுமே மோதினான்; நாங்களோ வானத்தோடும் மோத வேண்டியிருந்தது. நேரம் நீள நீள எங்கள் கை சோர்ந்துகொண்டு போனது. அவனா? நாங்களா? என்ற நிலை. சண்டையை நடத்திக்கொண்டிருந்த தளபதி, நிலைமையின் இக்கட்டைப் பிரதான கட்டளையகத்துக்குச் சொல்லிக்கொண்டேயிருந்தான். கைவிடமுடியாது; ஏற்கெனவே இந்த முகாமை அழிப்பதற்காக நாங்கள் செலுத்திவிட்ட விலை பெறுமதியானது; திரும்பவும் ஒரு தடவை அற்புதமான உயிர்களைக் கொடுக்க முடியாது. துவங்கியதோடு அடித்துத்துடைத்து முடித்துவிடவேண்டும்; இனி விட இயலாது.

கடைசி வழிமுறை ஒன்றைக் கையாள கட்டளைப்பீடம் முடிவு செய்தது. கைவசம் வைத்திருந்த, தேர்ச்சிபெற்ற வீரர்களைக் கொண்ட மேலதிக தாக்குதலணி ஒன்றை - நுட்பமான ஒரு தந்திரோபாயத்தோடு பிரயோகித்து ஒரு இறுதி எத்தனிப்பைச் செய்வதே அது. அவனா? நாங்களா? என்ற எதிர்பார்ப்புக்கு விடை தரப்போகும் அடி; அந்த வரலாற்றுத் தாக்குதலின் வெற்றியை நிர்ணயிக்கப்போகிற அதிரடி. இதன் முக்கியத்துவம் முக்கியமானது.

ஹெலித்தளத்தில் சண்டையிடும் எதிரியை கிழக்குத் திசை வழியாக மேலால் மேவி வளைத்து, அவனை வலது பக்கத்தால் நெருங்கி, அறைந்து நொருக்கவேண்டும். வான் ஆதிக்கத்தைத் தனது கையில் வைத்திருப்பவனின் கண்களுக்கு மண் தூவி - நில ஆதிக்கத்தைத் தக்கவைத்துக்கொள்ளப் போரிடுகின்றவனின் பார்வையில் பட்டுவிடாமல் - அவனை அண்மிப்பது என்பது, அந்த உச்சி வெயில் பகலில் ஒரு இமாலயக் காரியம். எதிரியை எதிர்கொள்ளும் நேரம்வரை, தன்னைச் சேதப்பட்டுவிடாமல் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு அந்த அணிக்கு உண்டு; தோல்வியைத் தழுவும் நிலையிலிருந்து அந்தத் தாக்குதலை மீட்கவேண்டிய பொறுப்பும் அதற்குத்தான் உண்டு. எனவே, அந்தச் சிக்கலான சூழ்நிலையிலும் சரியான முறையில் நகர்த்திச்சென்று, சரியான நேரத்தில்- சரியான இடத்தில் - தாக்குதலைத் தொடுத்து, அந்த அணியை வழிநடாத்தக் கூடிய திறமை, அதன் கொமாண்டருக்கு இருக்கவேண்டும். அணியின் தளபதியாகி நகரத் துவங்கியவன் நவநீதன்.

தாக்கிக்கொண்டிருந்த எமதணி தளர்ந்துகொண்டிருந்த வேளை, அனுப்பிவைத்த தளபதி காத்திருந்த நேரம், என்ன முடிவோ என நாங்கள் ஏங்கி நின்ற பொழுது- மூர்க்கங்கொண்ட புலிகளாய் பாய்ந்தனர் வீரர்கள். ஆக்ரோசமான தாக்குதல் தடைகள் உடைந்து, தானை சிதைந்து, பகைவன் சின்னாபின்னமாகிப்போக - புதிய தெம்புடனும், புதிய வேகத்துடனும் பிரதான முகாமைக் குறிவைத்தனர் புலிகள்

எங்கள் கதாநாயகனுக்கு வெடி; இடுப்பு எலும்பை நொருக்கிச் சென்றுவிட்டது சன்னம். காலுக்கு மணல் மூடை கட்டித் தொங்கவிட்டு, யாழ்ப்பாணம் மருத்துவமனையில் படுத்திருந்து, ''இந்தச் சுமையின் வேதனையைவிட, மாங்குளத்தை வென்றதே மனதுக்கு மகிழ்வு'' என்றவன், 7மாதங்களுக்குப் பிறகு எழுந்து நடக்கத் துவங்கிய போது, இடதுகாலில் ஒரு அங்குலம் கட்டையாகிப்போயிருந்தது.

முல்லைத்தீவில்ஒருபடையெடுப்பு-

நவநீதன் அப்போது முல்லைத்தீவு மாவட்டத்திற்குத் தளபதி; லெப்ரினன்ட் கேணல் நரேசுக்குத் துணைவனாய் நின்று, நிர்வாக வேலைகளை ஒழுங்கமைதுக் கொண்டிருந்தான்.

தாக்குதல் நடவடிக்கை ஒன்றுக்காக தளபதி தீபனும், நரேசும் எமது படையணிகளை எடுத்து வேறு ஒரு இடத்திற்குக் கொண்டு சென்றிருந்தவேளை, 'சத்பல' என்று பெயர் சூட்டிக்கொண்டு முல்லைத்தீவிலிருந்து படையெடுத்தான் எதிரி; ஆயிரக்கணக்கான துருப்புக்கள், யுத்த வானூர்திகள் பலம் சேர்க்க பெருமெடுப்பில் முன்னேறத் துவங்கினர்.

ஆனால் காவலரணில்இருந்ததோ சண்டைக்குத் தேர்ச்சி பெறாத போராளிகள். சண்டை செய்யக் கூடியவர்கள் என்று எவருமே இல்லை. இருந்தவர்களைத்தான் பொறுக்கி எடுத்து அனுப்பியாகி விட்டதே. இருப்பவர்கள் சண்டைக்கு அனுபவப்படாதவர்கள்; புதியவர்கள்.

அவர்களை வைத்துக்கொண்டு, எதிரி முகாமின் வாசலிலேயே களத்தைத் திறந்தான் நவநீதன்.

ஒரு முழுநாள் - 'நவநீதன் சண்டையைச் செய்வித்தான்' என்பதைவிட, 'நவநீதன்தான் சண்டை செய்தான்' என்றுதான் சொல்ல

வேண்டும். திரண்டு நகர்ந்த அந்நிய சேனையை, திறமையுடனும்- துணிவுடனும் தடுத்துத் தாமதப்படுத்தினான் அந்தப் போர்வீரன். மறுநாள் எமது படைப்பிரிவுகள் வந்துசேருகின்றபோது, தந்திரமாகச் சண்டையிட்டு, திரண்டு நகர்ந்த பகைவர்களை அவன் தடுமாற வைத்திருந்தான். அந்த முதல்நாள் சண்டையில் தங்களில் 6 பேர் கொல்லப்பட்டதாக சிறீலங்கா வானொலி அறிவித்தது.

“இனியாவது என்ர றொபடியனைவிட்டை விடுவியளோ?” என்று கேட்காத, கேட்க நினையாத- “எப்ப தம்பி எங்களுக்குச் சுதந்திரம் எடுத்துத் தரப்போறியள்?” என்று மட்டும் மனதாரவே ஆதங்கப்படுகின்ற - ஒரு தமிழன்னையின் மடியில், அந்தப் பூ முகையவிழ்ந்தது. அது - 1969 ஆம் ஆண்டு, நொவெம்பர் 12 ஆம் நாள். திருலோகநாதன் என்று திருநாமம் சூட்டினார்கள்.

“குவா......குவா......!” சத்தத்தோடு, அந்தக் குழந்தை - தவழ்ந்து, உருண்டு, மண்ணளைந்து, தத்தித் தடுமாறி எழுந்து நடக்கத் துவங்கிய அந்த ஓலைக் குடிசையில், அவனுக்கு முன்னமே ஏழ்மை பிறந்திருந்தது. நிரந்தரத் தொழில் இல்லை. நிலபுலங்கள் எதுவும் இல்லை. இரண்டு நேரம் சாப்பிடக்கூட வழியில்லை; வறுமை.

கனகராயன்குளம் மகாவித்தியாலயத்தில் படித்துக்கொண்டிருந்தவன், 7ஆம் வகுப்போடு - குடும்பத்தின் ஏழ்மைச் சிலுவைக்குத் தோள் கொடுக்க, வீட்டில் நின்றுகொண்டான். இருந்தாற்போல் ஒருநாள் - திடீரென, அப்பா தில்லையம்பலத்தார் மீளாத் துயில் கொண்டுவிட்டபோது, துன்பமும் ஏழ்மையும் சேர்ந்து அழுத்திய பெருஞ்சுமைக்குள் அந்தக் குடும்பம் சிக்குண்டது; வதங்கியது.

இத்தகைய துயர்படிந்த ஒரு குடும்பப் பின்னணியிலிருந்து, அவன் போராட்டத்துக்கு வந்தபோது, அவனுக்கு 16 வயது.

தளபதி பசீலனின் அரவணைப்பில் அந்தச் சின்னப் போராளி வளரத் துவங்கினான்.

அவனுக்குப் போர் ஆசானாகி நின்ற, அவனது போராட்ட வாழ்வின் ஆரம்பத்தை வழிப்படுத்திவிட்ட குரு, அவர்தான்.

துப்பாக்கிகள் தந்து, சிறந்த வீரர்களுக்கு நிகரானவனாகச் சுடப் பழக்கி, பயிற்சிகள் வழங்கி - அந்தச் சின்ன வயதிலேயே, நவநீதனுக்குள் மாபெரும் வீரத் தன்மைக்கு வித்திட்ட பெருமை, பசீலனையே சாரும்.

தளபதி பசீலனின் மெய்ப்பாதுகாவலனாக, ‘எம் 16’ உடன் கூடத்திரிந்த நாட்கள், அவனுக்குள் ஆழப்பதிந்த நினைவுகள்; அந்தக் காலத்தில் அவர் சொல்லித்தந்த சண்டை முறைகள், மறத்தலற்ற மனப்பாடங்கள்.

நவநீதன் பகைவரைச் சந்தித்த முதற்களம் என்று குறிப்பிடக்கூடியது, முந்திரிகைக்குளம் தாக்குதல்.

மணலாற்றில் சிங்களக் குடியேற்றத்துக்கு விழுந்த பலமான முதல் அடி அது. அந்தப் பெருவெற்றியைப் பிறப்பித்தவன் பசீலன். அப்போது - ‘கென்ற்’, ‘டொலர்’ பண்ணைகளில் மட்டுமே தொற்றியிருந்த அந்த விசக் கிருமிகள், பல்கிப் பெருகி மணலாற்றில் படரத் துவங்கிய பிரதான அசைவுப் பாதையை, பதவியாவிலிருந்து மேற்குக் கரை நோக்கி காட்டினூடு அமைத்துக் கொண்டிருந்த இராணுவ அணியே தாக்கப்பட்டது.

வியூகம் அமைத்துநின்று, தளபதி பசீலன் தாக்குதலை நடாத்தியபோது- அவரது நிழலாக நின்று பொறி கக்கினான் நவநீதன். கொல்லப்பட்ட 20 வரையான படையினரில் சிலரது உடல்களில், அந்தச் சின்ன வீரனது துப்பாக்கிதான் கோலம் போட்டதான் ... சண்டை முடிந்தபோது புலிகள் இயக்கத்தின் ஆயுத இருப்பில் 12, ‘ரி56’கள் கூடியிருந்தன; சிங்களக் குடியேற்றத் திட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டதுடன், திட்டத்தின் அந்தப் பிரதான அசைவுப் பாதை, நிரந்தரமாகவே கைவிடப்பட்டது.

இந்தியப் போர் ஆரம்பித்தபோது -

இந்தியப் படையின் ‘புகழ்பெற்ற யாழ்ப்பாணச் சமரில்’, கோப்பாய்ச் சண்டை எமது முல்லைத்தீவு மாவட்டப் படையணியால் எதிர்கொள்ளப்பட்டது. தளபதி பசீலனின் அந்த அணியில் நவநீதனும் களத்தில் நின்றான். இந்தியர்களின் இரண்டு ‘B.M.P ராங்க்’குகள் நொருக்கப்பட்டதுடன், அங்குலமும் அசையாமல் தடுத்துநிறுத்தப்பட்ட அந்த நாட்கணக்கான சண்டையில், சொல்லிக்காட்டக்கூடியளவு திறமையுடன் நவநீதன் போரிட்டான்.

கோப்பாயில் சண்டையை முடித்துக்கொண்டு திரும்பிய படையணி, முல்லைத்தீவில் போர் அரங்கைத் திரைநீக்கம் செய்தபோது -

துயரம்! கொடுந்துயரம்; முல்லைத்தீவில் ஒரு சண்டைக்களத்தில், மாபெரும் வீரன் பசீலன் வீழ்ந்துபோனான்; முல்லை மண் துடித்தது. அதன் மடியில் பிறந்த குழந்தை அவன்; அந்த மண்ணின் வரலாற்றில் பொறிக்கப்பட்ட தளபதி அவன். நவநீதன் கலங்கினான்; கதறினான்; அவனால் தாங்க முடியவில்லை.

அடிபட்ட நாகமாய் அலையத் துவங்கினர் புலிகள். பதிலடி கொடுக்க பகலிரவாய்த் திரிந்தவர்களிடம் வசமாகச் சிக்கியது ஒரு இந்திய அணி - பசீலனை எம்மிடமிருந்து பிரித்தது இதே அணிதான் என்பது முக்கியமானது- தண்ணீரூற்று வித்தியானந்தாக் கல்லூரிக்குப் பின்னால், தளபதி பால்ராஜின் தலைமையில் எம் இரண்டு அணிகள். ஒன்றுக்குக் கொமாண்டர் போர்க்; அடுத்ததுக்கு நவநீதன். மூர்க்கத்தனமான சண்டை. நவநீதனின் நெஞ்சுக்குள் பசீலண்ணனின் நினைவுகள் கனன்றன. பகைவர்களை நெருப்பெனச் சுட்டெரித்தான் அந்த வீரன். இந்தியரின் முதலாவது குழு தாக்கியழிக்கப்பட்ட பின்னர், மீட்கவந்த அடுத்த குழு தாக்கப்பட்டது. 25 பேரளவில் கொல்லப்பட்ட சண்டையில், கைப்பற்றப்பட்ட ஆயுதங்களுள் இரண்டு பிறண் எல். எம். ஜிகள்.

இந்தியர்கள் ‘ஒப்பரேசன் செக்மேற்’றை நடாத்திக்கொண்டிருந்தார்கள்.

பெரும் போர்களைக் கண்ட, உலகின் 4ஆவது பெரிய தரைப்படையின் 30,000 துருப்புக்கள் எங்கள் விடுதலைப் போராட்டத்தின் மையக் கருவைக் கிள்ளியெறிய நகர்த்தப்பட்ட வரலாற்றுச் சமர்; பிரசித்திபெற்ற மணலாற்றுப் படையெடுப்பு.

குமுழமுனை மலைமுகாம் என்ற இந்தியத் தளம்தான் ‘செக்மேற்’றின் மையம்: கட்டளைப்பீடம்: உயர் தளபதிகள் தங்கியிருந்து ‘பிரபாகரனைக் கொல்லும்’ போரை நெறிப்படுத்திய தலைமையகம். இந்த முகாமில் ஒரு தாக்குதலைச் செய்வதன்மூலம், ‘செக்மேற்’றுக்கு ஒரு நெருக்கடியைக் கொடுக்கவும், இந்தியரின் கவனத்தைத் திசைதிருப்பவும் திட்டமிடப்பட்டது. ஒரு புலர்வுப் பொழுதில், அந்த முகாமின் தலைவாசலைத் தாக்கினர் புலிகள். மேஜர் கின்னிக்குத் துணைக் கொமாண்டராய்ச் சென்று வெற்றியைப் பெற்றுவந்தவன் நவநீதன். எதிர்பாராத மையத்தில் விழுந்த அதிரடி - புலிகள் கொடுத்த நெற்றியடி. இந்தியத் தளபதிகள் குழம்பிப் போயினர். செய்வதறியாது திகைத்தனர். படை நகர்த்து முன்னர், நகர்த்தும் பீடத்தைப் பாதுகாக்கவேண்டும். குறிப்பிட்ட ஒரு காலத்துக்கு ‘செக்மேற்’ நிறுத்தப்பட்டது. தங்கள் இலக்கு மீது இந்தியர்கள் கொடுத்த நெருக்கடி தளர்ந்தது. இந்த வெற்றியில் நவநீதனுக்கும் பெரும் பங்குண்டு.

நவநீதனைப் பற்றிச் சொல்வதானால் - சண்டையில்தான் ஆரம்பிக்கவேண்டும்: சண்டைகளால் தொடரவேண்டும்: சண்டையொன்றில் முடிக்கவேண்டும்.

அவனது சண்டைகளை விளக்குவதன்மூலம்தான் அவனை வர்ணிக்கமுடியும்.

போர்தான் அவனுடைய ‘தனிச் சிறப்புக் கலை’

போரில்தான் அவன் ‘துறைசார் வல்லுனன்’.

எங்கள் இயக்கத்தில் தலைசிறந்த சண்டை வீரர்கள் என்று தேர்ந்தெடுத்தால், நவநீதன் தவறமாட்டான்.

எதிரிகளை எதிர்கொள்ளும் வேளைகளில், எல்லோரையும் மேவி முன்னால் நின்று - அவனுடைய துப்பாக்கி தீ உமிழும்.

கணப்பொழுதுக்குள் எதிரியின் மூச்சுப்படும் தூரத்துக்கு நெருங்கி, அவன் சுழன்றடித்துச் சுட்டு வீழ்த்தும் லாவகம் - மெய் சிலிர்க்க வைக்கும்.

அவனொரு ‘Quick Gunner’ - ‘மின்னல் வேகத் துப்பாக்கி வீரன்.’ பொருதுகளங்களில், எதிரி காணுமுன் எதிரியைக்கண்டு, துப்பாக்கியை புயலின் வேகத்தில் இயக்குவான். அந்த வேகத்திலும், குறி பிசகாமல், நிதானமாகக் குறிவைக்கும் வல்லமை, அவனது தனி ஆற்றல்.

அவனது சண்டைகள் பார்ப்பவர்களை வியக்கவைக்கும்; சண்டை தெரிந்தவர்களைக்கூட ஆச்சரியப்படுத்தும்.

சமர்க்களங்களின் நடுவில் சிக்கலான சூழ்நிலைகள்பிறக்கும்போது, மதிநுட்பம்வாய்ந்ததமாக முடிவெடுத்து - எச்சரிக்கையாகவும், அவதானமாகவும் செயற்பட்டு - இடையூறுகளை வெற்றிகரமாகச் சமாளித்துவிடும் திறமை மிக்கவன் அந்தத் தளபதி.

போர்வீரர்கள் இரண்டு வகையானவர்களாகக் காணப்படுவார்கள். ஒருவகை - குழுச்சண்டை வீரர்கள். அடுத்தவகை - தனிச்சண்டை வீரர்கள். குழுச்சண்டையானது படையாட்கள் எல்லோர்க்கும் பொதுவானது. யுத்தப் பயிற்சி பெற்ற எல்லோருமே செய்யக்கூடியது. ஆனால் தனிச்சண்டை அப்படியானதல்ல; அதற்குத் தனித்தன்மையான நிபுணத்துவம் தேவை. குறிப்பிட்ட சிலர்தான் அதில் வல்லவர்களாக இருப்பார்கள். நவநீதன் ஒரு தனிச்சண்டைக்காரன். நூற்றுக்கணக்கான வீரர்களைக் கொண்ட ஒரு சேனையை தனித்து நின்று எதிர்கொள்ளக்கூடிய மனத்துணிவும், புத்திக் கூர்மையும், செயற்திறனும் அவனிடம் உண்டு.

போரன்றி வேறெதும் நினையாத புலிவீரன் அவன். பயிற்சியைப் பற்றியும், வேவைப்பற்றியும், ஆயுதங்களைப் பற்றியும், சண்டையைப் பற்றியுமே அவன் பேசிக்கொண்டிருப்பான். தூக்கத்தில் வருகின்ற கனவுகள்கூட அவனுக்குக் கள நிகழ்வுகளாகத்தான் இருந்திருக்கும்.

எல்லாப் போராளிகளுமே அவனோடு சண்டைக்களத்துக்குப் போக விருப்பப்படுவார்கள். அவர்களுக்கெல்லாம் அவன் ஒரு நம்பிக்கை நட்சத்திரம். இயக்கத்தின் உயர் தளபதிகளினதும் அதித நம்பிக்கைக்குப் பாத்திரமான போராளியாக அவன் திகழ்ந்தான். தனது செயல்களாலே அவன் வளர்த்துக்கொண்ட நம்பிக்கை அது. ஆம், செயலால் மட்டும்.

சமர் அரங்கொன்றின் பின்முனையிலிருந்து நிலைமைகளை அவதானித்துக் கொண்டிருக்கும் கட்டளைத் தளபதி, சண்டை சிக்கல்படுகின்ற சில சூழ்நிலைகளில், “இந்த நேரத்தில் எப்படிச் செய்யவேண்டும்” என நினைக்கின்றாரோ, சண்டையின் முன்முனையில் வழிநடாத்தும் நவநீதன் அப்படியே செய்து முடிப்பான். அந்த அளவுக்கு, போர்பற்றிய அறிவை- ஞானத்தை- அவன்பெற்றிருந்தான்.

கட்டையாகிப்போன காலைப் பற்றி அவன் கருத்திலெடுப்பதேயில்லை. சண்டைகளில் அவன் முன்னுக்கு ஓடித்திரிந்து தாக்கும்போதும், தாக்குதல்களுக்காக நாங்கள் நீண்ட தூரத்திற்குச் செல்லவேண்டுமானாலும் - மனஞ்சோராமல் உற்சாகத்தோடு நடக்கும்போதும், அவன் தனது மனவுறுதியைக்காட்டுவான்; அது வியப்பைத் தரும்.

நவநீதன் அன்பானவன். மிக அமைதியானவன். மென்மையான சுபாவத்தைக் கொண்டவன்.

“நவநீதன் பேசிப்போட்டான்” என்று, யாருமே சொல்லாத அளவுக்குப் பண்பானவன்.

அவன் அதிகம் கதைக்கமாட்டான் - இடைக்கிடை பகிடி சொல்லுவான்; மற்றவர்களது மனங்களை நோகவைக்காமல், எப்போதாவது யாரையும் கிண்டல் செய்வான். அவ்வளவோடுசரி.

நிர்வாக வேலைகளைச் செய்யும்போது வளைந்துகொடுத்து, எல்லோரையும் சமாளித்து, விடயங்களை ஒப்பேற்றிவிடுகிற திறமையைக் கொண்டவன். எல்லா வகையான மனப்பாங்கு உடையவர்களும் ஏற்றுக்கொள்ளும்படியாக நடந்துகொள்ளும் பக்குவம் மிக்கவன்.

எப்போதும் ஒரு அப்பாவித்தனம் அவனது விழிகளில் மிதக்கும்.

எப்போதும், ஒரு குழந்தைத்தனம் அவனது முகத்தில் குடியிருக்கும்.

எங்கள் நெஞ்சுகளுக்குள் பொந்து அமைத்து வாழ்ந்த மாடப்புறா அவன்.

பகைவர்களுக்கு முன்னால் யுத்த சன்னத்தனாகி நெருப்பென நிற்கும் அந்த வீரன், எங்களுக்குள் - பனிநீராய்ப் படர்ந்து குளிர்மையாக வருடுகின்ற நண்பன்.

எவ்வளவு ஆற்றல்கள் அவனுக்குள் குவிந்து கிடந்தன! எத்துணை திறமைகளின் ஒட்டுமொத்த வெளிப்பாடாக அவன் உலா வந்தான்! ஆனாலும் அவன் வெளியில் மினிராத போர்வீரன்; தன்னைப் பிரபல்யப்படுத்திக்கொள்ள விரும்பாத விடுதலைப் புலி. இலைமறைகாயாக இருந்து, பிரளயங்களைப் படைத்துக்கொண்டிருந்த பிரபாகரனின் பிள்ளை.

இறுதிக்காலத்தில் சண்டைகளுக்குப் பின்னாலேயே அவன் வைத்திருக்கப்பட்டான். ஏற்கெனவே ஏராளமான சண்டைகளுக்குள் நின்றவன்; மாங்குளத்தில் வெடி வாங்கி காலைச் சின்னதாக்கிக்கொண்டவன். சண்டைகளில், அவன் பயன்படுவதைவிட, அவன் பட்டறிந்து பெற்றிருக்கும் அனுபவம் மிகுந்த பயன்பாட்டைத் தரும். எனவேதான், இயக்கத்திற்காகவும் அவனுக்காகவும் சமர்களின் பின்முனையிலேயே அவன் வைத்திருக்கப்படுவான். ஆனாலும், பின்னுக்கே நின்று ஒழுங்குகளைச் செய்துகொண்டிருப்பவன், சண்டை வெடித்த அடுத்த நிமிடங்களில் முன்னுக்கேதான் போய்விடுவான்.

புலோப்பளைச் சண்டையைப் பாருங்கள். அதில் அவனது பங்கு முக்கியமானது; குறிப்பிடத்தக்கது.

பூநகரிக்குப் படையெடுக்க நாங்கள் ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்தபோதுதான், எதிரியானவன் யாழ்ப்பாணத்துக்குப் படையெடுத்தான்.

ஆனையிறவுப் படைத்தளத்திருந்து ஆரவாரமான ஏற்பாடுகளுடன் ‘யாழ்தேவி’ புறப்பட்டவுடனேயே நவநீதனது குழுதான் அங்கு அனுப்பப்பட்டது.

பகைவர் சேனைக்கு வாசலிலேயே வரவேற்புக்கொடுக்க அல்ல; அவர்களின் அசைவுகளை அவதானித்துத் தகவல் சொல்ல மட்டும்.

ஒரு படையெடுப்பை முறியடிக்க முனையும்போது முக்கியமாகக் கவனிக்கவேண்டிய விடயம் போர் வியூகமாகும். எமது படைவீரர்களை சரியானதோர் வியூகமமைத்து நிறுத்திவைக்கும் போது

(11ஆம் பக்கம் பார்க்க)